அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 180

எனது இல.2/9/361(எச்)iv
அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு-7
1980, ஒக்டோபர் மாதம் 16 ஆந் தேதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவர்க்கும்.

அரசாங்க உத்தியோகத்தர்களின் நியமனம், இடமாற்றம், பதவி நீக்கம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பன சார் தத்துவங்களைக் கையளித்தல்.

1978, ஒற்றோபர் மாதம் 18ஆந் தேதியிட்ட 130ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையில் அடங்கியுள்ள அரசாங்க உத்தியோகத்தர்களின் நியமனம், இடமாற்றம், பதவி நீக்கம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பன சார் தத்துவக் கையளிப்பானது அமைச்சரவை செய்தவொரு முடிபினால் 1980, மே மாதம் 21 ஆந் தேதி தொடக்கம் மேல்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) நியமனம்

இணைந்த சேவைகளைச் சேராத பதவிநிலைத் தரங்களில்லாத அரசாங்க உத்தியோகத்தர்கள்.

வேண்டியவிடத்துப் பிரதித் திணைக்களத் தலைவர்களுக்குக் கையளிக்கப்படவுள்ளது; இயைபுள்ள மாண்புமிகு அமைச்சர் அத்தகைய கையளிப்பை அமைச்சரவையிடமிருந்து பெறுதல் வேண்டும்.

(11) இடமாற்றம்

பதவிநிலைத் தரங்களில்லாத அரசாங்க உத்தியோகத்தர்கள்.

மாண்புமிகு அமைச்சர் ஒருவர் குறிப்பிட்ட விடயங்களில் தமது அனுமதியைப் பெற வேண்டிய தேவையை விட்டுவிடலாம்; அத்தகைய விடயங்களில் அவர் தமது தத்துவத்தை செயலாளர் ஒருவர்க்கு அல்லது திணைக்களத் தலைவர் ஒருவர்க்குக் கையளிக்கலாம்.

(111) பதவி நீக்கம்

இணைந்த சேவைகளைச் சேராத, பதவிநிலைத் தரங்களில்லாத அரசாங்க உத்தியோகத்தர்கள்.

வேண்டியவிடத்துப் பிரதித் திணைக்களத் தலைவர்களுக்குக் கையளிக்கப்படவுள்ளது. இயைபுள்ள மாண்புமிகு அமைச்ச அத்தகைய கையளிப்பை அமைச்சரவையிடமிருந்து பெறுதல் வேண்டும்.

( iv ) ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு

(அ) இணைந்த சேவைகளில் பதவிநிலைத் தரங்களிலுள்ள அரசாங்க உத்தியோகத்தர்கள்.

இணைந்த சேவைகளிலுள்ள அத்தகைய உத்தியோகத்தர்கள் கடமையாற்றுவதிலிருந்து அவர்களுக்குத் தடையாணையிடும் தத்துவம் சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளருக்குக் கையளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) இணைந்த சேவைகளைச் சேராத, பதவிநிலைத் தரங்களில்லாத அரசாங்க உத்தியோகத்தர்கள்.

வேண்டியவிடத்துப் பிரதி/உதவித் திணைக்களத் தலைவர்களுக்குக் கையளிக்கப்படவுள்ளது; இயைபுள்ள மாண்புமிகு அமைச்சர் அத்தகைய கையளிப்பை அமைச்சரவையிடமிருந்து பெறுதல் வேண்டும்.

(இ) இணைந்த சேவைகளில் பதவிநிலைத் தரங்களில்லாத அரசாங்க உத்தியோகத்தர்கள்.

பதவி நீக்கம் அல்லது சேவை முடிவுறுத்துகை, அல்லது வினைத் திறமையின்மை காரணமாகக் கட்டாயமாக ஓய்வு பெறச் செய்தல் நீங்கலான சிறு தண்டனைகளை விதிப்பதன் மூலம் தண்டிக்கும் தத்துவம் அமைச்சுக்களின் செயலாளருக்கும் திணைக்களத் தலைவர்களுக்கும் கையளிக்கப்பட்டுள்ளது.

02. 1978ஆம் ஆண்டில், அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் கீழ் பதவிநிலைத் தரத்திலுள்ள ஒருத்தியோகத்தருக்கெதிராக இடப்பட்ட பதவி நீக்கம் தவிர்ந்த ஒழுக்காற்றுக் கட்டளையொன்றுக்கெதிராக அவரிடமிருந்து தனியொரு மேன்முறையீட்டை ஏற்கும் தத்துவத்தையும் அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அமைச்சரவை கையளித்துள்ளது.

ஒப்பமிட்டவர்: டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்த்தன,
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.